செய்தி வெளியீடு நாள்: 11.02.2024

**சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் புதிதாக தேர்வு செய்யப்பட்ட 12 உதவி பொறியாளர்களுக்கு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் மற்றும் தலைவருமான திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி, இன்று (11.02.2024) சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராஜன் மாளிகையில் உள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் மற்றும் தலைவருமான திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் புதிதாக தேர்வு செய்யப்பட்ட 12 உதவி பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களான வடசென்னை வளர்ச்சித் திட்டம், குத்தம்பாக்கம் புதிய பேருந்து முனைய விரிவாக்கம், செங்கல்பட்டு பேருந்து முனையம், மாமல்லபுரம் பேருந்து முனையம், வெளிவட்டச் சாலை மேம்பாடு, சாத்தாங்காடு இரும்பு மற்றும் எஃகு அங்காடியினை நவீன மயமாக்குதல், ஒருங்கிணைந்த கிழக்கு கடற்கரை மேம்பாடு உள்ளிட்ட பொது உட்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் மறுவடிவமைப்புத் திட்டங்கள் போன்ற பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்வதற்கான பணிகளைக் கருத்தில் கொண்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமானது உதவி பொறியாளர் நிலையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு கேட்டுக்கொள்ளப்பட்டது.

அந்த வகையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த பொறியாளர் பணியிடங்களுக்கான எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வுகளை நடத்தி, தகுதி பெற்ற 12 உதவி பொறியாளர்களை தெரிவு செய்து அவர்களின் பெயர்களை இக்குழுமத்திற்கு அனுப்பி வைத்ததன் அடிப்படையில், இன்று (11.02.2024) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் மற்றும் தலைவருமான திரு. பி.கே. சேகர்பாபு அவர்களால் 12 உதவி பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது. இக்குழுமத்தால் கடைசியாக, கடந்த 2013 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 உதவி பொறியாளர்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட்டன. 10 ஆண்டுகளுக்கு பிறகு 12 உதவி பொறியாளர்களை நியமனம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது மற்றும் குறிப்பாக, புதிதாக பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்ட உதவி பொறியாளர்களின் மூலம் இக்குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகளை விரைந்து முடிக்கவும் பேருதவியாக இருக்கும்.

இந்நிகழ்வின் போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்/நிர்வாக அலுவலர் (பொ) திருமதி.மு.இந்துமதி அவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.